தின கனி

செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தின கனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்






| Vol: 02 | Issue: 98 | 4 Pages | 6.11.2024 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 98 | 4 பக்கங்கள் | 6.11.2024 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்**
**உள்ளான் வெகுளி யெனின்**

**விளக்கம்:**
ஒருவன் தன் மனதால் சினத்தை எண்ணாதிருப்பானானால் நினைத்த நன்மைகளைஎல்லாம்அவன்ஒருங்கேபெறுவான்.

## ராட்சத பூசணிக்காயை படகாக மாற்றி பயணம் வீடியோ




அமெரிக்கா, நவ.6

அமெரிக்காவின் ஒரேகான் மாகாணத்தைச் சேர்ந்தவர் கேரி கிறிஸ்டென்சன் (வயது 46). கின்னஸ் சாதனை முயற்சிக்காக கடந்த 2011 முதல் இவர் தனது தோட்டத்தில் ராட்சத பூசணிக்காயை வளர்த்து வருகிறார். அதன்படி இந்த ஆண்டு சுமார் 500 கிலோ எடை கொண்ட பூசணிக்காயை வளர்த்தார். பின்னர் அந்த பூசணி மூலம் ஒரு படகை உருவாக்கினார்.

இதனையடுத்து கின்னஸ் சாதனை முயற்சியாக கொலம்பியா ஆற்றில் அந்த படகை துடுப்பு மூலம் செலுத்தினார். அதன்படி போன்வில்லே நகரில் இருந்து வான்கூவர் வரை 73 கிலோ மீட்டர் தூரத்துக்கு அந்த படகில் சென்றார். 26 மணி நேரம் நீடித்த இந்த கின்னஸ் சாதனை முயற்சி சமூகவலைதளங்களில் வைரலாகியது. இந்த வீடியோவை இதுவரை லட்சக்கணக்கானோர் பார்வையிட்டு உள்ளனர்.

## இந்தோனேசியாவில் வெடித்து சிதறிய எரிமலை 9 பேர் பலி



இந்தோனேசியா, நவ.6

பசிபிக் நெருப்பு வளைய பகுதியில் அமைந்திருப்பதால் இந்தோனேசியாவில் செயல்படும் பல எரிமலைகள் காணப்படுகின்றன.

அவற்றில் சுமத்ரா மாகாணத்தில் உள்ள மராபி எரிமலை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இங்கு மலையேற்ற வீரர்கள் சாகசத்தில் ஈடுபடுவதால் சிறந்த சுற்றுலா தலமாகவும் திகழ்கிறது.

இந்தநிலையில் மராபி எரிமலை நேற்று பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது.

இதில், சுமார் 6 ஆயிரத்து 500 அடி உயரத்துக்கு கரும்புகை வெளியேறியது. எனவே அந்த பகுதி முழுவதும் கரும்புகை மண்டலமாக காட்சியளித்தது.

இதனால் எரிமலையை சுற்றியுள்ள பகுதியில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர்.

இதில், வீடுகள் எரிந்து 9 பேர் பலியாகியுள்ளனர். நெருப்புக்குழம்பு வெளியேறுவதால், அருகில் உள்ள கிராமங்களில் உள்ள வீடுகள் எரிந்து சாம்பலாகின.

சிதைந்த வீடுகளுக்குள் சிக்கி பலர் பலியாகியிருக்கலாம் என்று அஞ்சப்படுவதால் பலி எண்ணிக்கை மேலும் உயரலாம் என கூறப்படுகிறது.

## அதிபர் தேர்தல் கருத்துக் கணிப்பு: கமலா ஹாரிஸை விட டிரம்ப் 7 மாநிலங்களில் முன்னிலை

அமெரிக்கா, நவ.6

வல்லரசு நாடான அமெரிக்காவில் நாளை அதிபர் தேர்தல் நடக்கிறது. இதில் ஜனநாயக கட்சி சார்பில் தற்போதைய துணை அதிபரும், இந்திய வம்சாவளியை சேர்ந்தவருமான கமலா ஹாரிஸ், குடியரசு கட்சி சார்பில் முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்ப் போட்டியிடுகிறார்கள்.

தேர்தல் நாளை நடைபெறவுள்ள நிலையில், இருவரும் இறுதிக்கட்ட பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் அதிபர் தேர்தலில் யார் எவ்வளவு முன்னிலையில் உள்ளனர் என்று அட்லஸ் இன்டெல் என்கிற நிறுவனம் வெளியிட்ட கருத்தக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, குடியரசுக் கட்சியின் அதிபர் வேட்பாளரான டொனால்ட் டிரம்ப் தனது போட்டியாளரும் அமெரிக்க துணை அதிபருமான கமலா ஹாரிஸை விட ஏழு மாநிலங்களில் முன்னிலை பெற்றுள்ளதாக அட்லஸ் இன்டெல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அரிசோனா, ஜார்ஜியா, மிச்சிகன், நெவாடா, வட கரோலினா, பென்சில்வேனியா மற்றும் விஸ்கான்சின் ஆகும். இந்த மாநிலங்களில் டிரம்ப் முன்னிலை வகிக்கிறார்.

இதற்கு முன்னதாக, அயோவா மாகாணத்தில் நடந்த கருத்துக்கணிப்பில் கமலா ஹாரிஸ் முன்னிலையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. அவருக்கு 47 சதவீத ஆதரவு கிடைத்தது. டிரம்புக்கு 44 சதவீத ஆதரவு கிடைத்தது. டிரம்பை விட கமலா ஹாரிஸ் 3 சதவீதம் அதிகம் பெற்றுள்ளார்.

2016 மற்றும் 2020ம் ஆண்டுகளில் நடந்த தேர்தலில் அயோவா மாகாணத்தில் டிரம்ப் எளிதில் வெற்றி பெற்று இருந்தார். தற்போது அங்கு அவர் பின்தங்கி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இரு வேட்பாளர்கள் இடையே கடும் போட்டி நிலவும் என்று அரசியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# அரசு திட்டங்கள் மக்களுக்கு சென்றடைகிறதா? கள ஆய்வு பணியை கோவையில் தொடங்குகிறார் முதலமைச்சர்

சென்னை, நவ.6

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தமிழக அரசு சார்பில் நிறைவேற்றப்பட்டு வரும் மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் நலத்திட்ட பணிகள் மக்களை முழுமையாக சென்றடைகிறதா? என மாவட்ட வாரியாக சென்று கள ஆய்வு செய்ய உள்ளார்.

இந்த கள ஆய்வுப்பணியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இன்று கோவையில் இருந்து தொடங்குகிறார். இதற்காக கோவைக்கு வரும் அவர் இன்றும், நாளையும் என 2 நாட்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இன்று காலை 10 மணிக்கு சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை வருகிறார். அவருக்கு, கோவை விமான நிலையத்தில் அமைச்சர் செந்தில்பாலாஜி தலைமையில் தி.மு.க.வினர் உற்சாக வரவேற்பு அளிக்கிறார்கள்.

காலை 11.30 மணிக்கு விளாங்குறிச்சியில் எல்காட் நிறுவனம் சார்பில் தகவல் தொழில் நுட்ப சிறப்பு பொருளாதார மண்டல வளாகத்தில் ரூ.114.16 கோடி மதிப்பில் 8 தளங்களுடன் 3.94 ஏக்கரில் கட்டப்பட்ட புதிய தகவல் தொழில்நுட்ப பூங்கா கட்டிடத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்.

பின்னர் மதியம் 12 மணிக்கு சுகுணா திருமண மண்டபத்தில் கள ஆய்வு பணியின் ஒரு அங்கமாக, முதலமைச்சர் முன்னெடுப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் சார்பில் நில எடுப்பில் இருந்து நிலங்கள் விடுவிக்கப்பட்டதற்கான ஆணைகளை அந்த நில உரிமையாளர்களுக்கு வழங்குகிறார்.

இதைத்தொடர்ந்து மாலை 4 மணிக்கு போத்தனூர் பி.வி.ஜி. திருமண மண்டபத்தில் நடைபெறும் தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்கிறார். அப்போது அவர், 2026 சட்டசபை தேர்தலை எதிர்கொள்வது குறித்து ஆலோசனை வழங்குகிறார்.



இரவு அரசு விருந்தினர் மாளிகையில் தங்குகிறார்.

புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கோவை சிறைச்சாலை வளாகத்தில் நடைபெற்று வரும் செம்மொழி பூங்கா கட்டுமான பணிகளைமுதலமைச்சர்மு.க.ஸ்டாலின் ஆய்வு செய்கிறார். இதையடுத்து அவர், திறந்தவெளி சிறைச்சாலையின் ஒரு பகுதியில் ரூ.300 கோடி மதிப்பில் கட்டப்பட உள்ள கலைஞர் நூற்றாண்டு நூலக கட்டுமான பணிக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

அதைத்தொடர்ந்து அவர் மதியம் கோவையில் இருந்து விமானம் மூலம் சென்னை புறப்பட்டு செல்கிறார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வருகையையொட்டி கோவை மாவட்ட தி.மு.க.வினர் உற்சாகம் அடைந்து உள்ளனர். கலைஞர் நூலக அடிக்கல் நாட்டு விழாவில் தி.மு.க.வினர் மற்றும் பொது மக்கள் திரளாக பங்கேற்க உள்ளனர். இதற்காக பிரமாண்ட பந்தல் மற்றும் மேடை அமைக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

முதலமைச்சர் வருகையையொட்டி கோவையில் 3,500 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகிறார்கள்.இதற்காகஉள்ளூர்போலீசார் மட்டுமின்றி வெளி மாவட்டங்களில் இருந்தும் போலீசார் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர்.

# விழுப்புரத்தில் காணை வட்டார அளவிலான கலை திருவிழா

விழுப்புரம், நவ.7

விழுப்புரம் மாவட்டம், காணை ஒன்றியம், மாம்பழப்பட்டு கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் காணை வட்டார அளவிலான கலைத்திருவிழா போட்டிகள் 01ம் வகுப்பு முதல் 05ம் வகுப்பு வரை மாம்பழப்பட்டு அரசு மேல்நிலைப்பள்ளியில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில், வட்டார வளமைய மேற்பார்வையாளர் ஆரோக்கிய அனிதா, ஆசிரியர் பயிற்றுநர் சுபாஷ், தலைமையற்றனர்.

இப்பள்ளியின் தலைமை ஆசிரியர் அருளரசன் விழாவினை தொடக்கி வைத்தார்.

ஈவான்சலின் கவிதா, கஜலட்சுமி, அனிதா, லட்சுமி, ஈவாபிரீத்தா ஆகியோர் தொடக்க நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் நடுவர்களாக இருந்து சிறப்பான முறையில் பல்வேறு போட்டிகள் நடத்தினர்.






இதில் வானவில் மன்ற கருத்தாளர் இராதாகிருஷ்ணன், ராஜேஷ் மற்றும் ACI நிர்வாகி மற்றும் பயிற்சியாளர் ஏணையோர் உடனிருந்து கலைத்திருவிழாவை திறம்பட நடத்தி முடித்தனர்.

மாணவர்களும் ஆர்வமுடன் பங்கேற்று மிகவும் மகிழ்ச்சியான முறையில் பங்களித்தனர்.

உடன் பெற்றோர்களும் பள்ளியின் ஆசிரியர்களும் பாதுகாப்பான முறையில் மாணவ மாணவிகளை அழைத்து வந்து மீண்டும் கலைத் திருவிழாவில் கலந்து கொள்ளச் செய்து திரும்ப அழைத்துச் சென்றனர்.

நடந்த கலைத் திருவிழா நிகழ்வில், மெல்லிசை தனிப்பாடல், தேசபக்தி பாடல்கள், களிமண் பொம்மைகள், மாறுவேட போட்டி, நாட்டுப்புற நடனம், பரதநாட்டியம், பேச்சுப்போட்டி, திருக்குறள் ஒப்புவித்தல், கதை கூறுதல், வண்ணம் தீட்டுதல் உள்ளிட்ட போட்டிகள் நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# மாணவர்களும், இளைஞர்களும் வாழ்வில் முன்னோக்கி நடைபோட வேண்டும்: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, நவ.6

சென்னை கொளத்தூர் தொகுதியில் ரூ.2.85 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 'முதல்வர் படைப்பகத்தை' முதலமைச்சர்



மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். படிப்பு தளம், பணியாற்றும் தளம் மற்றும் உணவுத்தளம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை இந்த படிப்பகம் உள்ளடக்கியுள்ளது. ஒரே நேரத்தில் 51 பேர் படிக்கின்ற அளவுக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில், இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறியிருப்பதாவது:


"முதல்வர் படைப்பகம்"... பன்னாட்டு நிறுவனங்களில் பணிபுரிந்தாலும், வீட்டில் இருந்து பணிபுரிவதுபோல், அலுவலகங்களுக்கு வெளியே இருந்து பணிபுரியும் இளைஞர்களது வேலைக்கு ஏற்றாற்போல், வைபை (WiFi) உள்ளிட்ட வசதிகளுடன் கூடிய பகிர்ந்த பணியிட மையம் அமைக்கப்பட்டுள்ளது.

அனைத்து வகையான போட்டித் தேர்வுகளுக்கும் தயாராகும் மாணவர்கள் கவனச் சிதறல்களின்றிப் பயில ஏதுவாகப் படிப்பகம் ஆகியவற்றைக் கொளத்தூர் தொகுதியில் உருவாக்கியுள்ளோம்.

இதுபோன்ற மையங்களைச் சென்னையின் பிற தொகுதிகளிலும் உருவாக்கிட வேண்டும் என அமைச்சர்களிடமும் அதிகாரிகளிடமும் அறிவுறுத்தியுள்ளேன். இத்தகைய வாய்ப்புகளைச் சீரிய முறையில் இளைஞர்களும், மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்; வாழ்வில் முன்னோக்கி நடைபோட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## சிமெண்ட் சாலை அமைத்து தர கோரி மாணவி மனு



மதுரை, நவ.6

மதுரை மாவட்டம் கிழக்கு ஊராட்சி ஒன்றியம் மாங்குளம் அருகில் உள்ள மீனாட்சிபுரம் பகுதியை சேர்ந்த ஏழாம் வகுப்பு மாணவி ரூபியா பள்ளி மாணவியான இவர் தன் குடியிருப்பு பகுதியில் சிமெண்ட்சாலைஅமைக்கவில்லை ஆடர் வந்தும் கிடப்பில் போட்டுள்ளனர் இங்கு பல குடியிருப்பு வாசிகள் வசித்து வருகின்றனர் இருப்பினும் சாலை அமைக்காதளால் நீர் குளம் போல் தேங்கியுள்ளது இதனால் தொற்று நோய் வந்துவிடும் என அச்சத்தில் உள்ளோம் எனவே எங்களுக்கு சிமெண்ட் சாலை அமைத்து தரும்படி கேட்டுக்கொள்கிறோம் என இச்சிறுமி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கோ சங்கீதா அவர்களிடம் புகார் அளித்துள்ளார்

தினகனி



# தமிழ் தேசியமும், திராவிடமும் ஒன்றுதான் பிரேமலதா



சென்னை, நவ.6

மதுரையில் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

★ தமிழ் தேசியமும், திராவிடமும் ஒன்றுதான். எங்கள் கட்சிதான் அதற்கான பதில்.

★ கட்சியிலேயே தேசியமும் இருக்கிறது. திராவிடமும் இருக்கிறது. தமிழகமும் இருக்கிறது. அதை முற்போக்கு சிந்தனையோடு கொண்டு செல்வதுதான் தேசிய முற்போக்கு திராவிட கழகம்.

★ தமிழை நேசித்தவர் நம்முடைய கேப்டன் என்று எல்லோருக்கும் தெரியும். எத்தனையோ படங்களில் நடித்தாலும் தமிழை தவிர மற்ற எந்த மொழிகளிலும் நடிக்காமல் சரித்திர சகாப்தத்தை படைத்தவர் கேப்டன்.

★ 'தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா' என்று அத்தனை இடத்திலும் தமிழைப் பற்றி பேசியவர் கேப்டன்.

★ தமிழைத் தவிர மாற்று மொழியை பேசாதவர் நமது கேப்டன் என்று அனைவருக்கும் தெரியும்.

★ அன்னை மொழி காப்போம். அனைத்து மொழியையும் கற்போம் என்று தான் இளைஞர்களுக்கு கேப்டன் சொன்னார். ★ எனவே நிச்சயமாக தமிழ் தான் நமது தெய்வம், அன்னை, அதில் மாற்று கருத்து கிடையாது.

★ எங்களைப் பொறுத்த வரை தேசியத்தில் தான் திராவிடம் இருக்கு திராவிடத்தில் தான் தமிழகம் இருக்கிறது. அதில் எந்த மாற்றுக்கருத்தும் கிடையாது. ★ அது இன்றல்ல நேற்றல்ல நூற்றாண்டு காலமாக இருக்கின்ற விஷயம். இனிமேல் அது பற்றி புதிய விளக்கம் கொடுக்க வேண்டிய அவசியம் கிடையாது என்பது எனது கருத்து என்று தெரிவித்துள்ளார்.

# திருவொற்றியூரில் தனியார் பள்ளியில் மீண்டும் வாயு கசிவால் 4 மாணவிகள் மயக்கம்



திருவொற்றியூர், நவ.6

திருவொற்றியூர் கிராமத் தெருவில் விக்டரி மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி உள்ளது.

இந்த பள்ளியில் 6ம் வகுப்பு முதல் பிளஸ்2 வரை 2ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவமாணவிகள் படித்து வருகிறார்கள். இந்த பள்ளி கட்டிடத்தின் 3வது தளத்தில் 6ம் வகுப்புமுதல் 12ம்வகுப்பு வரை மாணவிகள் படித்து வருகிறார்கள். அதே தளத்தில் ஆய்வுக்கூடமும் உள்ளது.

கடந்த மாதம் 26ந் தேதி இந்த ஆய்வுக்கூடத்தில் இருந்து ரசாயன வாயு கசிவு ஏற்பட்டது. இதனால் வகுப்பறையில் இருந்த 45 மாணவிகளுக்கு வாந்தி, மயக்கம், மூச்சுத்திணறல், கண் எரிச்சல், தொண்டை எரிச்சல் ஏற்பட்டது. ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று அவர்கள் வீடு திரும்பினர்.

இதைத்தொடர்ந்து கடந்த ஒரு வாரமாக பள்ளிக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. மேலும் பள்ளியில் உள்ள ஆய்வுக்கூடத்தில் மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

ஆனால் தற்போது வரை ஆய்வுக்கூடத்தில் ரசாயன வாயு கசிவு ஏற்பட்டதா? என்பது தெரியவில்லை. இதேபோல் வாயு எங்கிருந்து கசிந்து வருகிறது, எந்த வகையானது என்பதையும் கண்டுபிடிக்க முடியாமல் அதிகாரிகள் திணறி வருகிறார்கள்.

இந்த நிலையில் தீபாவளி பண்டிகை விடுமுறை முடிந்து இன்று காலை பள்ளி திறக்கப்பட்டது. காலை முதல் மாணவமாணவிகள் வகுப்புகளுக்கு வரத் தொடங்கினர்.

அப்போது பள்ளியில் மீண்டும் வாயு கசிவு ஏற்பட்டு 4 மாணவிகள் மயங்கினர். மேலும் பலருக்கு மூச்சுதிணறலும் ஏற்பட்டது. வகுப்பறைகளில் வாயு கசிந்து வாசனையும் வீசியது.

இதனால் அதிர்ச்சி அடைந்த பெற்றோர் அலறி அடித்துக் கொண்டு தங்களது குழந்தைகளை பள்ளியில் இருந்து வெளியே அழைத்து சென்றனர்.

இதுபற்றி அறிந்ததும் மாணவ மாணவிகளின் பெற்றோர்ஏராளமானோர் அங்கு குவிந்தனர். அவர்கள் பள்ளியை முற்றுகையிட்டு நிர்வாகத்தினர் மற்றும் அதிகாரிகளிடம் கடும் வாக்கு வாதம் செய்தனர். இதனால் பள்ளியில் பெரும்பரபரப்பு ஏற்பட்டது.

மயக்கம் ஏற்பட்ட மாணவிகளை ஆம்புலன்ஸ் மூலம் மீட்டு அதே பகுதி எல்லையம்மன் கோவில் அருகில் உள்ள அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு மாணவிகளுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. தற்போது மாணவிகள் நலமாக உள்ளனர்.

இது பற்றி அறிந்ததும் மாவட்ட கல்வி அலுவலர் முருகன், போலீஸ் துணை கமிஷனர் சக்திவேல், உதவி கமிஷனர் இளங்கோவன், இன்ஸ்பெக்டர்கள்ரஜினிஸ்,கிருஷ்ணராஜ் திருவொற்றி யூர் மண்டல அதிகாரி புருஷோத்தமன், வடக்கு வட்டாரத் துணை கமிஷனர் ரவிக்கட்டா தேஜா, மருத்துவ குழுவினர் மற்றும் தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து பள்ளியை ஆய்வு செய்தனர்.

மேலும் திருவொற்றியூர் எம்.எல்.ஏ.கே.பி.சங்கர், அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. கே.குப்பன், கவுன் சிலர் டாக்டர் கே. கார்த்திக் உள்ளிட்டோர் பள்ளி நிர்வாகத்தினரிடம் நடந்த சம்பவம் குறித்து கேட்டறிந்தனர்.

பள்ளியில் ஏற்பட்ட வாயு கசிவு எந்த வகையானது, எங்கிருந்து கசிகிறது என்பது தெரியாததால் தொடர்ந்து அப்பகுதியில் பரபரப்பான நிலை நிலவுகிறது. இதையடுத்து பள்ளிக்கு இன்றும் விடுமுறை அளிக்கப்பட்டது.


இதுகுறித்து மாணவிகளின் பெற்றோர் கூறும் போது, ஏற்கனவே பள்ளியில் வாயு கசிவு ஏற்பட்டு மாணவிகள் மயங்கினர். ஆனால் இந்த வாயு கசிவு குறித்து எந்த ஒரு அறிக்கையும் வெளியிடப்படவில்லை. வாயு எங்கிருந்து வருகிறது என்றே தெரியவில்லை.

இப்போது மீண்டும் பள்ளியை திறந்த போதும் வாயு கசிவால் மாணவிகள் மயங்கி உள்ளனர். வாயு கசிவை தடுக்க உரிய நடவடிக்கை எடுத்த பின்னர் பள்ளியை திறக்க வேண்டும்.

இதுபற்றி அதிகாரிகள் உரிய ஆய்வு செய்து விளக்கம் அளிக்க வேண்டும். மாணவ மாணவிகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும் என்றனர்.

# திண்டுக்கல் அருகே கட்டில் உடைந்து தந்தை, மகன் உயிரிழப்பு





திண்டுக்கல், நவ.6

திண்டுக்கல் அருகில் உள்ள சாணார்பட்டி காளியம்மன்கோவில்தெருவை சேர்ந்த கோபிக்கண்ணன் (வயது 35). இவர் வீட்டிலேயே துணிகள் தைத்துக் கொடுக்கும் டெய்லர் வேலை பார்த்து வந்தார்.

இவரது மனைவி யோகேஸ்வரி (32). நத்தம் அரசு ஆஸ்பத்திரியில் வேலை பார்த்து வருகிறார். இவர்களது மகன் கார்த்திக் (10) அங்குள்ள பள்ளியில் 5ம் வகுப்பு படித்து வந்தார்.

நேற்று இரவு யோகேஸ்வரி வேலைக்கு சென்று விட்டார். வீட்டில் கோபிக்கண்ணன் மற்றும் அவரது மகன் மட்டும் தூங்கிக் கொண்டிருந்தனர்.

மாடியில் இவர்கள் வசித்து வரும் நிலையில் கீழ் வீட்டில் யோகேஸ்வரியின் சகோதரர் வசித்து வருகிறார். கட்டிலில் கோபிக்கண்ணன் போதையில் தூங்கிக் கொண்டிருந்தார்.

அப்போது இரவு நேரத்தில் இரும்புக் கட்டிலின் போல்டு கழன்று விழுந்துள்ளது. இதனால் அவரது தலை கட்டிலின் இடுக்கில் மாட்டிக் கொண்டது.

அதிலிருந்து விடுபட முயன்ற கோபிக்கண்ணன் தவறி கீழே படுத்திருந்த தனது மகன் கார்த்திக் மீது விழுந்தார்.

இதில் தந்தை மகன் 2 பேரும் மூச்சுத்திணறி இறந்து விட்டனர்.

காலையில் பள்ளிக்கு செல்வதற்காக கார்த்திக் கீழே வராததால் அவரது மாமா எழுப்புவதற்காக சென்றுள்ளார். அப்போது தந்தை, மகன் 2 பேரும் இறந்து கிடந்ததை பார்த்து அதிர்ச்சியடைந்தார்.

இதுகுறித்து சாணார்பட்டி போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து உயிரிழந்த 2 பேரின் உடல்களை மீட்டு திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரிக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து சாணார்பட்டி சப்இன்ஸ்பெக்டர்கள் பொன் குணசேகர், ராஜேந்திரன் ஆகியோர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# பார்வையாளர்களை உறவுக்கூட்டுக்குள் அழைத்துச் சென்ற இயக்குநர் 'மெய்யழகனை' பாராட்டிய அன்புமணி





சென்னை, நவ.6

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

ஓடிடி தளத்தில் வெளியாகியுள்ள மெய்யழகன் திரைப்படத்தை தீபஒளி நாளில் கண்டு மகிழ்ந்தேன். முன்னோர் வழி, வம்சாவளி, கிராமத்து கல்யாண விருந்து, காளை, பாம்பு, பல்லியுடன் இணைந்த வாழ்க்கை, குடும்பத்தில் 4 பேர் மட்டுமே இருந்தாலும் கூட, பெரிய தாத்தா, சின்ன தாத்தா, அவர்களின் வகையறா என உறவுமுறைகளை இன்றைய இளம் தலைமுறைக்கு எடுத்துக் கூறும் சிறந்த படம்.

எனது சிறுவயது கிராமத்து நினைவுகளை மீண்டும் முழுமையாக எனக்குள் கொண்டுவந்த படம். நடிகர்கள் கார்த்தி, அரவிந்த் சாமி ஆகியோர் அற்புதமான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளனர். இயக்குநர் சி.பிரேம்குமார் பார்வையாளர்களை உறவுக்கூட்டுக்குள் அழைத்துச் சென்றுள்ளார். *Really felt good watching this feel good movie* என்று அவர் தெரிவித்துள்ளார்.

# கனமழையால் பாறைகள் உருண்டு பாதை துண்டிப்பு: நடந்தே பள்ளிக்கு செல்லும் மாணவ, மாணவிகள்



பெரியகுளம்:, நவ.6

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் உள்ளது அகமலை ஊராட்சி.

இப்பகுதி போடி தாலுகாவிற்கு உட்பட்டது என்றாலும் சாலை வசதி என்பது பெரியகுளம் சோத்துப்பாறை அணை வழியாகவே உள்ளது.

இந்த ஊராட்சியில் கண்ணகரை, அலங்காரம், பட்டூர், பரப்பம்பூர், அண்ணா நகர், கரும்பாறை, குறவன் குழி உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட மலை கிராமங்கள் உள்ளது.

இந்த மலை கிராமங்களுக்கு செல்லும் சாலையில் கடந்த 2 நாட்களாக கனமழை கொட்டியது. இதனால் 10க்கும் மேற்பட்ட இடங்களில் மண் சரிவு மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டு சாலை முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த சாலை 2 கி.மீ.தூரத்திற்கு வாகனங்கள் செல்ல முடியாத நிலையில் துண்டிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தீபாவளி விடுமுறை முடிந்து இன்று பள்ளிகளுக்கு செல்லும் மலை கிராம பள்ளி மாணவமாணவிகள் சாலையில் தேங்கியுள்ள மண் மற்றும் சகதிகளைகடந்தும்,சாலையில் சரிந்துள்ள புதர்கள் மற்றும் மரங்களைக் கடந்து 10 கி.மீ. தூரத்திற்கு உள்ள பாதையில் நடந்து செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் மலை கிராம மக்களின் அத்தியாவசிய உணவு பொருட்களை வாங்குவதற்கும், விவசாய விளை பொருட்களை விற்பனைக்காக பெரியகுளத்திற்கு கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதோடு, நடந்து செல்லவும் வழியில்லாத நிலை உள்ளதால் கிராமங்கள் துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனால் மலைகிராம மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்த சாலையில் மழைக்காலங்களில் ஏற்படும் பாதிப்புகளை கருத்தில் கொண்டு கடந்த மாதம் அரசு பஸ்சை சிறை பிடித்து பொதுமக்கள் போராட்டம் நடத்தினர்.

அதிகாரிகள் சமரசம் செய்து அவர்களை அனுப்பி வைத்தனர். ஆனால் அதன்பிறகும் சாலை ஏற்படுத்தி தராததால் தற்போது பெய்த கனமழைக்கு மலைகிராம மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக வேதனை தெரிவித்தனர்.

எனவே விரைந்து இந்த சாலையை சீரமைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

# விடுதலை சிறுத்தை கட்சியில் மாவட்ட செயலாளர்களை மாற்றம் செய்ய முடிவு

சென்னை, நவ.6

விடுதலை சிறுத்தைகள் கட்சி 144 மாவட்டங்களாக பிரிக்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகின்றன. 2 சட்டமன்ற தொகுதிகளுக்கு ஒரு மாவட்ட செயலாளர் என்ற அடிப்படையில் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

கட்சியில் உள்ளவர்களுக்கு பொறுப்புகளை அதிகளவில் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் புதிதாக மாவட்ட செயலாளர்களைநியமிக்க கட்சியின்தலைவர்தொல். திருமாவளவன் முடிவு செய்துள்ளார்.

புதியவர்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் கட்சியை மறு சீரமைப்பு செய்யதிட்டமிட்டுள்ளார்.

அதன்படி 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் தொகுதி வாரியாக மாவட்ட செயலாளர்களை திருமாவளவன் நியமிக்க முடிவு செய்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கட்சி தொண்டர்களுக்கு முகநூல் நேரலை வழியாக பேசி அறிவிப்பை வெளியிட்டார். அப்போது அவர் கூறியதாவது:

தமிழ்நாடு முழுவதும் 234 மாவட்டச்செயலாளர்கள் உள்ளிட்ட மாவட்ட நிர்வாகத்தை அறிவிக்க இருக்கிறோம்.

தற்போது இயங்கும் 144 மாவட்டச் செயலாளர்கள் அதிக புகார் உள்ளவர்கள், பணி செய்யாமல் செயலற்று இருப்பவர்கள் மற்றும் எல்லை பிரச்சனைகளை கருத்தில் கொண்டு ஒரு சிலரை அப்பொறுப்பில் இருந்து விடுவிக்க வேண்டி இருக்கும்.

புதிதாக நியமிக்கப்பட இருக்கும் 234 மாவட்டச் செயலாளரும் அந்தத் தொகுதியின் பெயரில் மாவட்டச் செயலாளர்கள் என்று அழைக்கப்படுவார்கள். பொறுப்புக்கான பரிந்துரை குழு அறிவிக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் அனுப்பப்படுவார்கள்.

புதிதாக விண்ணப்பம் அளிக்க விரும்புபவர்கள் இந்த பரிந்துரை குழுவிடம் நமது தமிழ்மண் சந்தா 2000 ரூபாய் மற்றும் பொறுப்புக்கு 1000 ரூபாய் டி.டி எடுத்து விண்ணப்பம் அளிக்க வேண்டும்.

ஒன்றிய செயலாளர்கள் உள்ளிட்ட ஒன்றிய நிர்வாகத்திற்கும் மற்றும் அணிகளின் மாநிலமாவட்ட பொறுப்புகளுக்கும் இந்த பரிந்துரை குழுவிடம் விண்ணப்பம் அளிக்கலாம்.

புதிதாக நியமிக்கப்படும் மாவட்ட நிர்வாகம்:

மாவட்டச்செயலாளர்1, மாவட்ட பொருளாளர்1, மாவட்டத் துணைச் செயலாளர்கள்5, மாவட்ட செய்தி தொடர்பாளர்1, செயற்குழு உறுப்பினர்1, மகளிர் அணி செயலாளர்1, இளஞ்சிறுத்தை எழுச்சி பாசறையின் மாவட்ட அமைப்பாளர்1, மேற்கண்ட மாவட்ட நிர்வாகத்தில் குறைந்தது 9 பேரும் அதிகபட்சம் 11 பேரும் இடம் பெறுவார்கள்.

கட்சியில் பிரிக்கப்பட்ட ஒருஒன்றியநிர்வாகத்திற்கு ஒரு மாவட்டத் துணைச் செயலாளர் என்ற அடிப்படையில் நியமிக்கப்பட இருக்கிறார்கள்.

ஒரு சட்டமன்றத் தொகுதிக்குள் ஐந்து முதல் அதற்கு மேற்பட்ட ஒன்றிய நிர்வாகம் நம் கட்சியில் பிரிக்கப்பட்டால், அந்த பிரிக்கப்பட்ட ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு மாவட்டத் துணைச் செயலாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

மாவட்ட நிர்வாகத்தில் உள்ள பொறுப்புகளின் எண்ணிக்கை அடிப்படையில் ஒன்றிய நிர்வாகத்திலும் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

வருகிற 15ந் தேதிக்குள் அனைத்து நிலை பொறுப்புகளுக்கும் பரிந்துரை குழுவிடம் விண்ணப்பம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

தமிழ்நாடு முழுவதும் வருவாய் மாவட்ட அடிப்படையில் நியமிக்கப்படும் பரிந்துரை குழுக்கள் இன்றி, மேலும் ஐந்து மண்டல உயர்நிலைக் குழுவும் அமைக்கப்பட இருக்கிறது.

வடமண்டலம், மேற்கு மண்டலம், மைய மண்டலம், டெல்டா மண்டலம், தென் மண்டலம் என்று 5 மண்டல உயர்நிலைக் குழு அமைக்கப்பட இருக்கிறது.

தற்போது உள்ள 144 மாவட்டச் செயலாளர்களில் ஒரு சிலர் ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் வருகிறார்கள். இவற்றைக் குறித்து அந்த பகுதிக்குள் வரும் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உயர்நிலைக் குழுவுடன் பேசி ஒரு முடிவு எடுத்து அவை சரி செய்யப்பட்டு அறிவிக்கப்படும்.

எந்த முடிவு ஆனாலும் என் உயிரின் உயிரான விடுதலைச் சிறுத்தைகள் ஏற்றுக்கொண்டு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த தகவலை தலைமை செய்தி தொடர்பாளர் கு.க.பாவலன் தெரிவித்துள்ளார்.

# வயநாடு இடைத்தேர்தல் பிரியங்கா காந்திக்கு நேரில் வாழ்த்து தெரிவித்த விஜய் வசந்த்



சென்னை, நவ.6

வயநாடு எம்.பி. பதவியை ராகுல்காந்தி ராஜினாமா செய்ததால், காலியான அந்த தொகுதிக்கு வருகிற 13ந் தேதி இடைத்தேர்தல் நடக்கிறது. இதில் காங்கிரஸ் வேட்பாளராக பிரியங்கா போட்டியிடுகிறார்.


தேர்தல் பிரசாரம் செய்வதற்காக பிரியங்கா நேற்று வயநாடு வந்தார். அவருடன் மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி வந்திருந்தார்.

கன்னியாகுமரி தொகுதி எம்.பி. விஜய் வசந்த், காங்கிரஸ் மாநிலத் தலைவர் செல்வப்பெருந்தகை சார்பில் வயநாட்டில் ராகுல் காந்தி மற்றும் பிரியங்கா காந்திக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து வயநாட்டில் பிரியங்கா காந்தி, ராகுல் காந்தி இருவரும் மானந்தவாடி காந்தி பார்க் பகுதியில் நடந்த தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் ஒரே மேடையில் கலந்து கொண்டு பேசினர்.

இந்நிலையில் அகில இந்திய பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தியை கன்னியாகுமரி தொகுதி எம்.பி. விஜய் வசந்த் சந்தித்து வாழ்த்து தெரிவித்துள்ளார்.

# பென்னாகரம் அருகே செல்போன் சிக்னல் கிடைக்காததால் மக்கள் முற்றுகை போராட்டம்



பென்னாகரம், நவ.6

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் அருகே உள்ள கோடுபட்டி கிராமத்தில் ஏராளமான பொது மக்கள் வசித்து வருகின்றனர். இந்த பகுதியில் செல்போன் சிக்னல் கிடைக்காததால் மக்கள் தவித்து வருகின்றனர்.

இதனால் உறவினர்கள், குடும்பத்தினர்களுக்கு பேச முடியாமல் கடும் சிரமம் அடைந்து வருகின்றனர். அந்த பகுதியில் பி. எஸ்.என்.எல். டவர் அமைக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கைவிடுத்து வந்தனர். ஆனால் எந்த அதிகாரியும் இதனை கண்டு கொள்ளவில்லை.

இதனால் ஆத்திரம் அடைந்த பொதுமக்கள் இன்றுகாலை 30க்கும் மேற்பட்டோர் இருசக்கர வாகனங்களை சாலையின் நடுவே நிறுத்தி விட்டு மறியல் போராட்டம் செய்தனர். இதனால் அந்த பகுதியில் போக்குவரத்து பாதிக்க ப்பட்டது.

இது குறித்து தகவல் அறிந்த பென்னாகரம் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். அங்கு போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் போலீசார் பேச்சு வார்த்தை நடத்தினர். இதனால் அங்கிருந்து போராட்டகாரர்கள் கலைந்து சென்றனர். இதனால் சுமார் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு.

## திருவெண்ணைநல்லூரில் கருணாநிதி 3 அடி உயர வெண்கல சிலை: உதயநிதி ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்



விழுப்புரம், நவ.6

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், பொதுமக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செயல்படுத்தி வரும் பல்வேறு சிறப்புத் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து மாவட்டம் வாரியாக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்.

ஏற்கனவே கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களில் ஆய்வு பணிகளை முடித்துள்ளார்.

அந்த வகையில் விழுப்புரம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப்பணிகளின் நிலை குறித்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நாளை (புதன் கிழமை) ஆய்வு செய்கிறார். இதற்காக அவர் இன்று (செவ்வாய்க்கிழமை) மதியம் சென்னையில் இருந்து காரில் புறப்படுகிறார்.

மாலை 4 மணியளவில் விழுப்புரம் மாவட்டத்தின் எல்லையான ஓங்கூர் மற்றும் திண்டிவனம், விக்கிரவாண்டி சுங்கச்சாவடி ஆகிய இடங்களில் உதயநிதிஸ்டாலினுக்குஅமைச்சர் பொன்முடி, தி.மு.க. மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் பொன்.கவுதமசிகாமணி ஆகியோர் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

இதையடுத்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அங்கிருந்து திருவெண்ணெய்நல்லூர் செல்கிறார். அங்கு மரகதம் கந்தசாமி மண்டபத்தின் முன்பு புதியதாக நிறுவப்பட்டுள்ள முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் 3 அடி உயரமுள்ள வெண்கல சிலையை திறந்து வைத்து பேசுகிறார்.

அதன் பின்னர் விழுப்புரம் அரசு சட்டக் கல்லூரியில் நடைபெறும் விழாவில் கலந்து கொண்டு பள்ளி மாணவர்களுக்கு அரசு சார்பில் விளையாட்டு உபகரணங்களை வழங்குகிறார்.

விழுப்புரம் மாவட்டத்தில் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தில் செஞ்சி வட்டத்தில் 60 பஞ்சாயத்துகளில் 70 விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகிறது.

காணை வட்டத்தில் 50 பஞ்சாயத்துகளில் 60 விளையாட்டு உபகரணங்களும், கண்டமங்கலம் வட்டத்தில் 46 பஞ்சாயத்துகளில் 63 விளையாட்டு உபகரணங்களும், கோலியனூர் வட்டத்தில் 42 பஞ்சாயத்துகளில் 54 உபகரணங்களும் வழங்கப்படுகிறது.

மேலும் மயிலம் வட்டத்தில் 47 பஞ்சாயத்துகளில் 58 விளையாட்டு உபகரணங்களும், மரக்காணம் வட்டத்தில் 56 பஞ்சாயத்துகளில் 66 விளையாட்டு உபகரணங்களும், மேல்மலையனூர் வட்டத்தில் 55 பஞ்சாயத்துகளில் 65 விளையாட்டு உபகரணங்களும், முகையூர் வட்டத்தில் 48 பஞ்சாயத்துகளில் 65 விளையாட்டு உபகரணங்களும், ஒலக்கூர் வட்டத்தில் 52 பஞ்சாயத்துகளில் 55 விளையாட்டு உபகரணங்களும், திருவெண்ணைநல்லூர் வட்டத்தில் 50 பஞ்சாயத்துகளில் 61 விளையாட்டு உபகரணங்களும், வல்லம் வட்டத்தில் 66 பஞ்சாயத்துகளில் 68 விளையாட்டு உபகரணங்களும், வானூர் வட்டத்தில் 65 பஞ்சாயத்துகளில் 76 விளையாட்டு உபகரணங்களும், விக்கிரவாண்டி வட்டத்தில் 51 பஞ்சாயத்துகளில் 62 விளையாட்டு உபகரணங்களும் என மொத்தம் 688 பஞ்சாயத்துகளில் 825 விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு இரவில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் தங்குகிறார்.

இதையடுத்து நாளை (புதன்கிழமை) காலை 9.30 மணியளவில் விழுப்புரம் கிழக்கு புதுச்சேரி சாலையில் எம்.ஆர்.ஐ.சி. ஆர்.சி. பள்ளியின் எதிரே விழுப்புரம் சட்டமன்ற தொகுதி இளைஞரணி சார்பில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு விழா நூலகத்தை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைக்கிறார்.

அதனைத் தொடர்ந்து, மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் அரசின் அனைத்துத்துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்று, விழுப்புரம் மாவட்டத்தில் அனைத்துத்துறைகளின் சார்பில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின்செயல்பாடுகள், அதன் முன்னேற்றங்கள் குறித்து ஆய்வு செய்கிறார். இதற்கான முன்னேற்பாடு பணிகளில் மாவட்ட நிர்வாகம் ஈடுபட்டுள்ளது.

## சென்னை மாநகராட்சியில் போக்குவரத்து மாற்றம்




சென்னை, நவ.6

சென்னை பெருநகர போக்குவரத்து காவல் துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மேம்பாலம் கட்டும் பணியினை கணேசபுரம் ரெயில்வே சுரங்கப்பாதை பகுதியில் மேற்கொள்ள உள்ளதால் இப்பணியின் காரணமாக, பின்வரும் போக்குவரத்து மாற்றங்கள் பரிந்துரைக்கப்பட்டு, 06.11.2024 முதல் ஒரு வாரத்திற்கு சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட உள்ளன. தற்போதுள்ள ஒருவழி போக்குவரத்தும், இதனையடுத்து, பின்வரும் போக்குவரத்து மாற்றுப்பாதைகளும் நடைமுறைப்படுத்தப்படும்.

★ ஸ்டீபன்சன் சாலை சந்திப்பு முதல் கணேசபுரம் சுரங்கப்பாதை வரைதற்காலிகமாக மூடப்படும்.

★ மேல்பட்டி பொன்னப்பன் தெருவில் இருந்து புளியந்தோப்பு நோக்கி செல்லும் வாகனங்கள் ஸ்டீபன்சன் சாலை வழியாக திருப்பி விடப்படும். மேலும் அவர்கள் ஏ.ஏ. சாலை, பெரம்பூர் நெடுஞ்சாலை, பெரம்பூர் மேம்பாலம், ஜமாலியா சாலை, குக்ஸ் சாலை சந்திப்பு, ஸ்டீபன்சன் சாலை, செங்கை சிவன் பாலம், டாக்டர் அம்பேத்கர் கல்லூரி சாலை வழியாக புளியந்தோப்பை அடையலாம்.

★ கணேசபுரம் சுரங்கப்பாதை வழியாக வியாசர்பாடி மற்றும் கொடுங்கையூர் நோக்கி செல்லும் வாகனங்கள் புளியந்தோப்பு நெடுஞ்சாலை காந்தி ரவுண்டானா பேசின் பாலம் வியாசர்பாடி புதிய பாலம் மார்க்கெட் முத்து தெரு மூர்த்திங்கர் தெரு வலது எருகஞ்சேரி சாலை வழியாக இலக்கை அடையலாம். போக்குவரத்து மாற்றத்திற்கு வாகன ஓட்டிகள் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## அரசுப்பள்ளிகளில் மும்மொழி கொள்கையைத் திணிக்க தி.மு.க. அரசு ஆயத்தமாகி வருகிறது சீமான்



சென்னை, நவ.6

மோடி அரசின் புதிய கல்விக்கொள்கையை ஏற்கவும், அதன் மூலம் அரசுப் பள்ளிகளில் மும்மொழி கொள்கையைத் திணிக்கவும் தி.மு.க. அரசு ஆயத்தமாகி வருகிறது என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

வன்முறைக்கு இலக்காகும் பெண்களுக்கு உதவுவதற்காக அமைக்கப்படும் தனி மையத்தில் பணிபுரிய தமிழ், ஆங்கிலம், இந்தி என மும்மொழி தெரிந்த பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்று தி.மு.க. அரசு அறிவிப்பு வெளியிட்டிருப்பது அதிர்ச்சியளிக்கிறது. அண்ணாவின் உயிர்க்கொள்கை இருமொழி கொள்கை என்று கூறிவிட்டு மறைமுகமாக மும்மொழி கொள்கையை தி.மு.க. அரசு திணிக்க முயல்வது வன்மையான கண்டனத்துக்குரியது.

திராவிடக் கட்சிகள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பிருந்தே தமிழ்நாட்டில் இருமொழி கொள்கையே நடைமுறையில் இருந்துவருகிறது. இந்திய ஒன்றியத்தை ஆண்ட அன்றைய காங்கிரஸ் அரசும் அதற்குத் துணைநின்ற தமிழ்நாட்டை ஆண்ட காங்கிரஸ் அரசும் இந்தி மொழியை வலுக்கட்டாயமாகத் தமிழ்நாட்டுப் பள்ளிகளில் கட்டாயப் பாடமொழியாகத் திணிக்க முயன்றபோது, துணிந்து எதிர்த்து நின்று போரிட்டு வென்றது தமிழர் மண்.

உயிர்மொழியாம் நம் தாய்மொழி தமிழ் காக்கும் அம்மொழிப்போரில் மானத்தமிழ் மறவர்கள் தீரத்துடன் தங்கள் இன்னுயிரை ஈகம் புரிந்தனர். அவர்களின் தன்னலமற்ற ஈகத்தினைத் தங்களுக்குச் சாதகமாக்கி, ஆட்சி அதிகாரத்தை அடைந்த அண்ணா தலைமையிலான தி.மு.க. அரசு, தமிழ், ஆங்கிலம் என இருமொழி கொள்கையே தமிழ்நாடு அரசின் கொள்கையாக நடைமுறையில் இருக்கும் என்று அறிவித்தது.

அதன்படி திராவிடக் கட்சிகள் மாறி மாறி ஆண்ட கடந்த ஐம்பதாண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாட்டில் இருமொழிகொள்கையை நடைமுறைப்படுத்தி, பல தலைமுறைகள் பாடம் பயின்று பட்டம் பெற்றுள்ள நிலையில், தற்போது இந்தி தெரிந்தால்தான் வேலைவாய்ப்பு என்று தி.மு.க. அரசு அறிவித்திருப்பது பச்சைத்துரோகம் இல்லையா?

தமிழ்நாட்டுப் பெண்களுக்கு உதவ தமிழ், ஆங்கிலம் தெரிந்திருந்தால் மட்டும் போதாதா? இந்தி தெரிந்திருக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது? தமிழ்நாட்டில் இந்தி தெரிந்த பெண்கள் மட்டும்தான் வந்து வாழ்கிறார்களா? இதரமொழி பேசும் பெண்கள் வந்து வாழவில்லையா? அப்படிப் பார்த்தால் அவர்களுக்கு உதவ அந்தந்த மொழிகள் தெரிந்த பெண்களை நியமிக்க வேண்டி வருமே? அதனால்தான் தமிழ்நாட்டில் தொடர்புகொள்ள தமிழ், இதர மாநில மக்களைத் தொடர்புகொள்ள ஆங்கிலம் என்பதுதானே அறிஞர் அண்ணா நாடாளுமன்றத்தில் முழங்கியது? அண்ணாவின் அத்தகைய இருமொழி கொள்கையைக் காற்றில் பறக்கவிடுவதுதான் திராவிட மாடலா?

ஏற்கனவே, தமிழ்நாடு அறநிலையத்துறை மற்றும் தொல்லியல்துறை பணிகளுக்கு சமஸ்கிருதம் தெரிந்தால்தான் விண்ணப்பிக்க முடியும் என்று மும்மொழியைத் திணிக்க தி.மு.க. அரசு முயன்றபோதே அதனை நாம் தமிழர் கட்சி கடுமையாகக் கண்டித்து எதிர்த்தது. அதன் தொடர்ச்சியாகத் தற்போது தமிழ்நாடு அரசின் சார்பில் அமைக்கவுள்ள பெண்களுக்கான உதவி மையத்திலும் இந்தி தெரிந்திருந்தால் மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்பது அப்பட்டமான இந்தி திணிப்பே அன்றி வேறென்ன?

ஏற்கனவே இந்திய ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டின் அரசுப்பள்ளிகளுக்குப் போதிய நிதியை ஒதுக்கவில்லை என்ற காரணத்தைக் காட்டி, மோடி அரசின் புதிய கல்விக்கொள்கையை ஏற்கவும், அதன் மூலம் அரசுப்பள்ளிகளில் மும்மொழி கொள்கையைத் திணிக்கவும் தி.மு.க. அரசு ஆயத்தமாகி வருகிறது. அதன் முன்னோட்டமே இத்தகைய இந்தி திணிப்பு அறிவிப்புகளாகும்.

ஆகவே, மும்மொழி தெரிந்தால்தான் தமிழ்நாட்டின் அரசுத்துறைகளில் வேலைவாய்ப்பு என்கிற தி.மு.க. அரசின் மறைமுக இந்தி திணிப்பு நடவடிக்கைகள் யாவும், தமிழ் மண்ணில் இன்னொரு மொழிப்போருக்கே வித்திடும் எனவும், அந்தத் தீயில் திராவிடம் செய்யும் துரோகங்கள் யாவும் மொத்தமாய் எரிந்து சாம்பலாகும் எனவும் எச்சரிக்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## மோட்டார் சைக்கிள் மீது கார் மோதி விபத்து: பெண் சப்இன்ஸ்பெக்டர், காவலர் உயிரிழப்பு





செங்கல்பட்டு, நவ.6

சென்னை புளியந்தோப்பு காவலர் குடியிருப்பில் வசித்து வருபவர் ஜெயஸ்ரீ (வயது 38). இவர் ஆவடி காவல் ஆணையரகத்துக்குட்பட்ட மாதவரம் பால் பண்ணை அனைத்து மகளிர்போலீஸ்நிலையத்தில் சப் இன்ஸ்பெக்டராக பணிபுரிந்து வந்தார். இந்த நிலையில் இவர் அதே போலீஸ் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வந்த நித்யா (33) என்பரை அழைத்து கொண்டு நேற்று அதிகாலை மோட்டார் சைக்கிளில் மேல்மருவத்தூர் நோக்கி சென்று கொண்டிருந்தனர்.

அப்போது செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அடுத்த சிறுநாகலூர் என்ற இடத்தில் சென்னை திருச்சி நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்தபோது, திருவண்ணாமலை நோக்கி அதிவேகமாக சென்ற கார் ஒன்று திடீரென இவர்கள் சென்ற மோட்டார் சைக்கிளின் பின்னால் எதிர்பாராத வகையில் மோதியது.

இதில் மோட்டார் சைக்கிளோடு சப்இன்ஸ்பெக்டர் ஜெயஸ்ரீ, பெண் போலீஸ்நித்யா ஆகியோர் தூக்கி வீசப்பட்டனர். இந்த விபத்தில் பலத்த காயமடைந்த ஜெயஸ்ரீ சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்த விபத்தில் கட்டுப்பாட்டை இழந்த காரும் கவிழ்ந்து சாலையில் உருண்டது. இதனைப் பார்த்து அதிர்ச்சியடைந்த அவ்வழியாக சென்றவர்கள் மேல்மருவத்தூர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் விரைந்து வந்து காவலர் நித்யா, கார் டிரைவர் அன்பழகன் ஆகியோரை மீட்டு செங்கல்பட்டு அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி காவலர் நித்யா பரிதாபமாக உயிரிழந்தார்.

திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பெண்ணாத்தூர் அருகே உள்ள குள்ளக்குப்பம் கிராமத்தை சேர்ந்த அன்பழகன் அதிவேகமாக காரை ஓட்டி வந்ததே விபத்துக்கு காரணம் என்று தெரியவந்ததையடுத்து, அவரை கைது செய்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

இந்த விபத்தால் அப்பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. விபத்தில் பலியான சப்இன்ஸ்பெக்டர் ஜெயஸ்ரீயின் சொந்த ஊர் மதுரை மாவட்டம் கடலப்புதூர் ஆகும். இவரது கணவர் ஜான். வெளிநாட்டில் வேலை பார்த்து வருகிறார். இவர்களுக்கு 10ம் வகுப்பு படிக்கும் விகாஷ் என்ற மகனும். 6ம் வகுப்பு படித்து வரும் விக்ஷிதா என்ற மகளும் உள்ளனர்.

பலியான பெண் போலீஸ்காரர் நித்யாவின் சொந்த ஊர் திண்டுக்கல் மாவட்டம் கொசவபட்டி கிராமம் ஆகும். சப்இன்ஸ்பெக்டர் ஜெயஸ்ரீயும், நித்யாவும் கல்லூரியில் ஒன்றாக படித்தவர்கள் என்று கூறப்படுகிறது.

இதனால் இவர்கள் இருவரும் ஒரே இடத்தில் பணிபுரிந்து வந்ததால் நெருக்கமாக பழகி வந்துள்ளனர். இந்த நிலையில் விபத்தில் போலீஸ்காரர்கள் இருவரும் பலியான சம்பவம் போலீஸ் அதிகாரிகளிடையே அதிர்ச்சியையும், சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக மேல்மருவத்தூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## திருவண்ணாமலை மகா தீபத்தின்போது 11,500 பக்தர்கள் கோவிலுக்குள்ளும், மலை ஏறுவதற்கு 2000 பேருக்கும் அனுமதி

திருவண்ணாமலை, நவ.6

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் நடைபெற உள்ள கார்த்திகை தீபத் திருவிழா முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் நேற்று மாலை கோவிலில் உள்ள உள்துறை அலுவலகத்தில் நடைபெற்றது. கலெக்டர் பாஸ்கர பாண்டியன் தலைமை தாங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் ராம்பிரதீபன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் மணி, அறங்காவலர் குழு தலைவர் ஜீவானந்தம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கோவில் இணை ஆணையர் ஜோதி வரவேற்றார்.

இதில் இந்து சமய அறநிலையத்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, மாநகராட்சி நிர்வாகம் உள்ளிட்ட அரசு துறைகள் மூலம் மேற்கொள்ளப்பட உள்ள பணிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. துறைவாரியாக மேற்கொள்ளப்பட உள்ள பணிகள் குறித்து அலுவலர்களிடம் கலெக்டர் கேட்டறிந்தார்.

கார்த்திகை தீபத் திருவிழா முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் கலெக்டர் பாஸ்கர பாண்டியன் தலைமையில் நடந்தபோது எடுத்தபடம்.

பின்னர் அவர் கூறியதாவது:

கார்த்திகை தீபத் திருவிழா வருகிற டிசம்பர் மாதம் 1ந் தேதி முதல் 17ந் தேதி வரைநடைபெற உள்ளது. இதில் 4ந் தேதி கொடியேற்றம் நிகழ்ச்சியும், 13ந் தேதி பரணி தீபம் மற்றும் மகா தீபம் ஏற்றப்பட உள்ளது. தீபத் திருவிழாவின்போது கோவிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள், பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆண்டு கார்த்திகை தீப திருவிழாவின் போது சுமார் 35 லட்சம் பக்தர்கள் திருவண்ணாமலைக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களுக்கு தேவையான போக்குவரத்து வசதிகள், அடிப்படை வசதிகளான குடிநீர், கழிப்பறை வசதிகள், உணவு வசதிகள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. திருவிழாவின்போது மாட வீதிகள் மற்றும் கிரிவல பாதையில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை வசதிகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது. தொடர்ந்துமுன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வு கூட்டங்களும், கள ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட உள்ளது.

கடந்த ஆண்டு மேற்கொண்ட சிரமங்கள் அனைத்தும் தீர்க்கப்பட்டு பக்தர்களுக்கு தேவையான விரிவான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படும். பரணி தீபத்தின்போது கோவிலுக்குள் 7,050 பக்தர்களும், மகா தீபத்தின்போது 11,500பக்தர்களும்கோவிலுக்குள் அனுமதிக்கப்படுவார்கள். மேலும் மலை ஏறுவதற்கு 2000 பக்தர்கள் அனுமதிக்கப்படுவார்கள். மலையேறும் பாதையில் மருத்துவ குழுவினர் மூலம் பரிசோதனை செய்யப்பட்ட பின்னரே அவர்கள் மலையேர அனுமதிக்கப்படுவார்கள். மகா தீபத்தன்று கோவிலில் தேவையானஅளவு போலீசார் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.

தீபத்திருவிழாவின் போது கோவிலுக்குள் இதய மருத்துவர் உள்பட 5 மருத்துவ குழுவினர் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளனர். தேவைப்படும் பட்சத்தில் கூடுதல் மருத்துவ குழுவினரும் ஏற்பாடு செய்யப்படும். மேலும் கோவில் மற்றும் கிரிவலப் பாதை என ஒட்டுமொத்தமாக 85 மருத்துவ குழுவினர் தீபத்திருவிழாவின் போது பணியாற்ற உள்ளனர்.


வருகிற 8ந் தேதி அருணாசலேஸ்வரர் தேர் வெள்ளோட்டம் நடைபெற உள்ளது. இதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

108 ஆம்புலன்ஸ் மற்றும் சுகாதார துறையினர் தயார் நிலையில் உள்ளனர். அன்றைய தினமும், தீபத் திருவிழாவின்போது பஞ்சமூர்த்திகள் தேரோட்டம் நடைபெறும் அன்றும் மாட வீதியில் மின் இணைப்புகள் துண்டிக்கப்படும். தங்கும் விடுதிகளில் வழக்கமான கட்டணத்தை விட அதிகமாக கட்டணம் வசூலிக்கப்பட்டால் புகார் கொடுக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட விடுதியின் மீது நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இதுகுறித்து விடுதி உரிமையாளர்களை அழைத்து ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டு அவர்களுக்கு அறிவுரை வழங்கப்படும்.

பரணி தீபத்தின்போது 500 ஆன்லைன் அனுமதி சீட்டும், மகாதீபத்தின் போது 1100 ஆன்லைன் அனுமதி சீட்டும் வழங்கப்பட உள்ளது.

அவ்வாறு அவர் கூறினார். கூட்டத்தில் அறங்காவலர் குழு உறுப்பினர்கள் மீனாட்சிசுந்தரம், ராஜாராம், கோமதி குணசேகரன், சினம் பெருமாள் உள்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நீர்நிலைகளை தனியாருக்கு தாரைவார்க்கும் முடிவை அரசு திரும்ப பெற வேண்டும்: அன்புமணி ராமதாஸ்



சென்னை, நவ.6

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

தமிழ்நாட்டில் வளர்ச்சி, கட்டமைப்பு என்ற பெயரில் அரசுக்கு சொந்தமான நீர்நிலைகளை தனியாருக்கு தாரை வார்க்க வகை செய்யும் தமிழ்நாடு சிறப்புத் திட்டங்களுக்கான நில ஒருங்கிணைப்பு சட்டம் கடந்த அக்டோபர் 18ம் நாள் முதல் செயல்பாட்டுக்கு வந்திருப்பதாக தமிழக அரசு அறிவித்திருப்பது கண்டிக்கத்தக்கது. பாட்டாளி மக்கள் கட்சியும், பல்வேறு உழவர் அமைப்புகளும் கடுமையாக எதிர்த்த பிறகும், தனியார் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு தமிழக அரசு எடுத்துள்ள இந்த நடவடிக்கை கண்டிக்கத்தக்கது.

சிறப்புத் திட்டத் தகுதிக்காக விண்ணப்பிக்கும்போதே திட்ட நிலத்தில் ஒட்டுமொத்த நீர் சேமிப்பு குறைக்கப்பட மாட்டாது, வாய்க்கால்கள், ஓடைகளின் கொள்திறன் அல்லது திட்ட நிலத்தின் மேல்பகுதியிலும் கீழ்பகுதியிலும் நீரோட்டமானது குறைக்கப்படாது என்று உறுதியளிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் சில நடைமுறைகளுக்குப் பிறகு சில நிபந்தனைகளுடன், தனியார் நிலங்களை ஒட்டியுள்ள ஏரி, குளங்கள், ஓடைகள் உள்ளிட்ட நீர்நிலைகள்தனியாரிடம் ஒப்படைக்கப்படும். இந்த விதிகளின்படி அரசுக்கு சொந்தமான நீர்நிலைகளை தனியார் நிறுவனங்கள்கைப்பற்றிக் கொள்ள முடியும். தமிழ்நாட்டில் ஏற்கனவே நீர்நிலைகளின் எண்ணிக்கை மற்றும் பாசனப் பரப்பு குறைந்து வரும் நிலையில், இந்த சட்டம் செயல்பாட்டுக்கு வந்தால், இப்போதுள்ள குறைந்த அளவிலான நீர்நிலைகளும் தனியாருக்கு தாரை வார்க்கப்பட்டு விடும். இதை அனுமதிக்க முடியாது.

தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு பாசனப்பரப்பை அதிகரிக்கும் நோக்குடன், ஒரே ஒரு பாசனத் திட்டத்தைக் கூட செயல்படுத்தவில்லை.

தமிழ்நாட்டின் இன்றையத் தேவை பாசனப் பரப்பை அதிகரிப்பது தான். அதற்கான புதிய நீர்நிலைகளை உருவாக்க வேண்டுமே தவிர, இருக்கும் நீர்நிலைகளையும் தாரை வார்க்கக் கூடாது. எனவே, தமிழ்நாடு சிறப்புத் திட்டங்களுக்கான நில ஒருங்கிணைப்பு சட்டத்தின் செயல்பாட்டை நிறுத்தி வைக்கவும், அடுத்த மாதம் நடைபெறவுள்ள சட்டப்பேரவைக் கூட்டத்தில் அதை திரும்பப் பெறவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# முடிச்சூர் ஆம்னி பேருந்து நிலையம் இம்மாதம் இறுதிக்குள் பயன்பாட்டுக்கு வரும்: அமைச்சர் சேகர்பாபு

சென்னை, நவ.6

அரசு பேருந்து நிலையம், ஆம்னி பேருந்து நிலையம் சென்னை கோயம்பேட்டில் இயங்கி வந்தன. அரசு பேருந்து நிலையம் கிளாம்பாக்கத்திற்கு மாற்றப்பட்டது. ஆம்னி பேருந்துகளுக்கு பிரத்யேகமாக முடிச்சூரில் 42 கோடி ரூபாய் செலவில் பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருகிறது.



கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் திறக்கப்பட்டு நீண்ட நாட்கள் ஆகியும் முடிச்சூர் ஆம்னி பேருந்து நிலையம் இன்னும் பயன்பாட்டுக்கு வரவில்லை. கிளாம்பாக்கத்திற்குள் வந்துதான் ஆம்னி பேருந்துகள் செல்கின்றன. கோயம்பேட்டில் இருந்து புறப்பட்ட செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

ஆயுதபூஜை மற்றும் தீபாவளி போன்ற பண்டிகை காலங்களில் கிளாம்பாக்கத்தில் அரசு பேருந்து பயணிகள் மற்றும் ஆம்னி பேருந்து பயணிகள் குவிந்ததால் பேருந்து நிலையம் ஸ்தம்பித்தது. கடும் கூட்டல் நெரிசல் ஏற்பட்டது.

இந்த நிலையில் 42 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முடிச்சூர் ஆம்னி பேருந்து நிலையம் இம்மாத இறுதிக்குள் பயன்பாட்டுக்கு வரும் என அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

இங்கு 120 பேருந்துகள் ஒரே நேரத்தில் நின்று செல்லும் வகையில் ஓட்டுநர்கள், நடத்துனர்கள் தங்குவதற்காக 2 Dormitoryகள், உணவகங்கள் என அனைத்து நவீன வசதிகளும் இடம் பெற்றுள்ளன. இது திறக்கப்பட்டபின் கிளாம்பாக்கத்தில் சற்று நெரிசல் குறையும் என அமைச்சர் சேகர்பாபு நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# பள்ளியில் வாயு கசிவு 2வது நாளாக அதிகாரிகள் சோதனை

சென்னை, நவ.6

சென்னை திருவொற்றியூர் கிராமத் தெருவில் தனியாருக்கு சொந்தமான விக்டரி மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி உள்ளது. இங்கு 6ம் வகுப்பு முதல் பிளஸ்2 வரை 1500க்கும் மேற்பட்ட மாணவமாணவிகள் படித்து வருகிறார்கள். இந்த பள்ளி கட்டிடத்தின் 3வது தளத்தில் 6ம் வகுப்பு முதல் பிளஸ்2 வரை மாணவமாணவிகள் படித்து வருகிறார்கள். அதற்கு எதிர் தளத்தில் ஆய்வுக்கூடமும் உள்ளது.



கடந்த மாதம் 26ந் தேதி இந்த ஆய்வுக்கூடத்தில் இருந்து ரசாயன வாயு கசிவு ஏற்பட்டது. இதனால் வகுப்பறையில் இருந்த 45 மாணவிகளுக்கு வாந்தி, மயக்கம், மூச்சுத்திணறல், கண் எரிச்சல், தொண்டை எரிச்சல் ஏற்பட்டது. சில மாணவிகள் வாந்தி ஏற்பட்டு மயங்கி விழுந்ததால் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினர். இதனால் கடந்த 1 வாரமாக பள்ளிக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. பள்ளியில் உள்ள ஆய்வுக்கூடத்தை மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். ஆனால் தற்போது வரை ஆய்வுக்கூடத்தில் ரசாயனவாயுகசிவு ஏற்பட்டுள்ளதை கண்டுபிடிக்க முடியாமல் அதிகாரிகள் திணறி வருகின்றனர்.

தீபாவளி விடுமுறை முடிந்து நேற்று மீண்டும் பள்ளி திறக்கப்பட்டது. ஆனால் ரசாயன வாயுகசிவு குறித்து மாவட்ட கல்வி துறை மற்றும் மாசு கட்டுப்பாட்டு துறையிடமிருந்து எந்த ஒரு அறிக்கையும் வெளியிடவில்லை. பெற்றோர்களிடம் பள்ளி நிர்வாகம் ஏதும் கூறவில்லை என்று கூறி பாதிக்கப்பட்ட மாணவிகளின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் ஏராளமானோர் பள்ளியை முற்றுகையிட்டு பள்ளி நிர்வாகிகளிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

மேலும் பள்ளியில் எதற்கெடுத்தாலும் அபராதம் விதிக்கின்றனர், கல்வி கட்டணம் அதிகம் வசூலிக்கின்றனர். பள்ளி வகுப்பறையில் காற்று வசதி இல்லை. போதிய கட்டமைப்பு இல்லை. விளையாட்டு மைதானம் கிடையாது. மாணவ மாணவிகளை ஆசிரியர்கள் அடிக்கின்றனர். பெற்றோர்கள் கேட்கும் கேள்விகளுக்கு ஆசிரியர்கள் பதில் கூறுவதில்லை என்று அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை கூறினர்.

அப்போது திடீரென்று 9 மாணவிகள் மயக்கம் அடைந்தனர். மீண்டும் பள்ளியில் ரசாயன வாயு கசிவு ஏற்பட்டதால் மாணவிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதனால் பெற்றோர்கள் அலறி அடித்துக்கொண்டு தங்கள் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு வீட்டுக்கு சென்றனர். மயக்கம் ஏற்பட்ட மாணவிகளை ஆம்புலன்ஸ் மூலம் எல்லையம்மன் கோவில் அருகில் உள்ள அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இது பற்றி தகவல் அறிந்ததும் தீயணைப்பு துறையினர், தாசில்தார் சகாயராணி, திருவொற்றியூர் மண்டல அதிகாரி புருஷோத்தமன், மருத்துவத் துறை அதிகாரிகள் உடனடியாக பள்ளிக்கு வந்தனர். மாநகராட்சி வடக்கு வட்டாரத் துணை கமிஷனர் ரவிகட்டா தேஜா அதிகாரிகளுடன் பள்ளியை ஆய்வு செய்தனர்.

இந்நிலையில் தனியார் பள்ளியில் மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் தொடர்ந்து இன்று 2வது நாளாக சோதனை நடத்தி வருகின்றனர்.

காற்றில் இருக்கக்கூடிய நச்சுத்தன்மை, வாயுக்களின் தரம் அறியும் இயந்திரம் கொண்டு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சோதனை நடத்தி வருகிறது.

# ரஜினி, அஜித் ரசிகர்களை கவர விஜய் வியூகம் கைகூடுமா அரசியல் கணக்கு?

சென்னை, நவ.6

தமிழக வெற்றிக்கழகத்தின் முதல் மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ள விஜய், அதே விறுவிறுப்புடன் கட்சியின் முதல் செயற்குழு கூட்டத்தையும் நடத்தி முடித்துள்ளார்.

கன கச்சிதமாக அரசியலில் ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்கும் விஜய், அடுத்தக்கட்டமாக மக்கள் சந்திப்பு கூட்டங்களை நடத்த இருக்கிறார். திரையுலகை தாண்டி, அரசியலுக்கு வந்துள்ள விஜய் அனைத்து தரப்பினரின் ஆதரவையும் தனதாக்கிக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார். அந்த வகையில் தான், யாரையும் தரக்குறைவாக விமர்சனம் செய்யக்கூடாது என்று தொண்டர்களுக்கு கண்டிப்புடன் விஜய் வலியுறுத்தியுள்ளார்.

நடந்த செயற்குழு கூட்டத்திலும் விஜய் இதை கண்டிப்புடன்வலியுறுத்தி இருக்கிறார். அரசியல் கட்சி தலைவர்களை மட்டுமல்ல, திரையுலகில் முன்னணியில் இருக்கும் ரஜினி, அஜித் உள்ளிட்டோர்களையும் எந்த வகையிலும் சமூக வலைத்தளத்தில் விமர்சனம் செய்யாதீர்கள் கூறியிருக்கிறார்.



ரஜினி, அஜித் படங்கள் வெளியாகும் போது விஜய் ரசிகர்களும், விஜய் படங்கள் வெளியாகும்போது ரஜினி, அஜித் ரசிகர்களும் சமூக வலைத்தளங்களில் கருத்தியல் ரீதியாக மோதிக்கொள்வது வழக்கமான ஒன்று. வார்த்தை போரில் தெறிக்க விடுவார்கள்.

திரைப்படங்கள்தொடர்பாக தனது ரசிகர்களுக்கும், அஜித் ரசிகர்களுக்கும் உள்ள மோதலை, அன்பு என்னும் புள்ளியில் இணைக்கும் வகையிலும், காலம், காலமாக நடந்து வரும் தலதளபதி போட்டிக்குமுற்றுப்புள்ளி வைக்கும் வகையில்தான், சமீபத்தில் கோட் படத்தில் அஜித் ரசிகர்களை மகிழ்ச்சி அடையும் வகையில் காட்சி ஒன்றும் அமைக்கப்பட்டது. அதே போல் ரஜினிகாந்த் ஆஸ்பத்திரியில் சிகிச்சையில் இருந்தபோது, சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் நலம் பெற விழைகிறேன் என்று எக்ஸ் வலைத்தளத்தில் பதிவு செய்திருந்தார்.

இருப்பினும் வலைத்தளத்தில் ரஜினிவிஜய், விஜய்அஜித் ரசிகர்கள் மோதல் என்பது குறைந்தபாடியில்லை. இதற்கிடையில் அரசியல் சம்பந்தமான கேள்விகளுக்கு பதில்அளிக்காமல்இருந்து வந்த நடிகர் ரஜினிகாந்திடம், விஜய் மாநாடு குறித்து கேட்கப்பட்ட போது, , விஜய் வெற்றிகரமாக மாநாட்டை நடத்தியிருக்கிறார், அவருக்கு என் வாழ்த்துகள் என்று தெரிவித்தார். இதை தனது கட்சி செயற்குழு கூட்டத்தில் விஜய் கூறி நெகிழ்ந்திருக்கிறார்.

இதற்கிடையே திரையுலகில் தான் நிறைவாக ஒப்புக் கொண்டுள்ள எச். வினோத் இயக்கும் படத்திற்கான படப்பிடிப்பில் விஜய் விரைவில் இணைய உள்ளார். இந்த படத்தின் மூலம் அனைத்து நடிகர்களையும் மனங்களையும் வெல்லும் அளவுக்கு காட்சி அமைப்புகள் இருப்பதாக சொல்லப்படுகிறது. அரசியலில் தனது பாதைக்கான முன்னோட்டமாக அந்த படம் இருக்கும் என்றும் சொல்லப்படுகிறது. சினிமா த்துறையில் தனக்கு போட்டியாளர்களாக இருப்பவர்களின் ரசிகர்களை தன் அன்பு பிடியில் கொண்டு வருவதற்கான விஜய்யின் அரசியல் வியூகம், அரசியல் கணக்கு எந்த அளவுக்கு கைகூடும் என்பது போக, போகத் தான் தெரியும்.

# நூறு நாள் வேலைத் திட்டத்தில் மோசடியில் ஈடுபட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் தினகரன்

சென்னை, நவ.6


நூறு நாள் வேலைத் திட்டத்தில் போலியான கணக்குகளை காட்டி மோசடியில் ஈடுபட்ட அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று டி.டி.வி. தினகரன் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: நூறு நாள் வேலைத்திட்டத்தின்கீழ் நடைபெற்ற மோசடிகள் குறித்து மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சகத்தின் தணிக்கைக் குழு நடத்திய ஆய்வின் படி 202324ம் நிதியாண்டில் நடைபெற்ற மொத்த மோசடியான 35 கோடி ரூபாயில், 34 கோடி ரூபாய் தமிழகத்தின் விருதுநகர் மாவட்டத்தில் மட்டுமே நடைபெற்றிருப்பதாக நாளிதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

நூறுநாள்வேலைத்திட்டத்தில்இறந்தவர்கள்,கிராமத்தில் இல்லாதவர்கள், வெளியூர் வாசிகள், வடமாநிலத்தவர்கள் என வேலைக்கு சம்பந்தமில்லாதவர்களின் பெயர்களை கணக்கு காட்டி மோசடி நடைபெறுவதாக அடிக்கடி ஏற்படும் புகார்களை அரசு அதிகாரிகள் அலட்சியமாக எதிர்கொள்வதே இது போன்ற மோசடிகள் அதிகரிக்க முக்கிய காரணம் என பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

எனவே, நூறு நாள் வேலைத் திட்டத்தில் போலியான கணக்குகளை காட்டி மோசடியில் ஈடுபட்ட அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு, இனி வரும் காலங்களில் அத்திட்டத்தின் மீது கூடுதல் கவனம் செலுத்தி முறைகேடுகளை தவிர்ப்பதோடு தகுதியான பயனாளிகள் பயன்பெறுவதை உறுதி செய்ய வேண்டும் என மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# 'இதனால்தான் தங்கள் படத்தில் நடிக்கும் நடிகைகளை நடிகர்களே தேர்ந்தெடுக்கிறார்கள்' டாப்சி



'ஆடுகளம்' படம் மூலம் தமிழ் சினிமாவுக்கு அறிமுகமானவர் நடிகை டாப்சி. 'வந்தான் வென்றான்', 'ஆரம்பம்', 'காஞ்சனா2', 'கேம் ஓவர்' போன்ற பல படங்களிலும் நடித்துள்ளார். தமிழ், தெலுங்கு படங்களில் நடித்துள்ள டாப்சி, இந்தியிலும் அதிக படங்களில் நடித்து முன்னணி கதாநாயகியாக உயர்ந்துள்ளார்.

இவர் தற்போது கதாநாயகிக்கு முக்கியத்துவம் உள்ள கதைகளை தேர்வு செய்து நடிக்கிறார். சமீபத்தில் இவர் பாலிவுட்டில் நடித்த 'டன்கி' மற்றும் 'ஜுட்வா 2' படங்களுக்கு அதிக சம்பளம் பெற்றதாக இணையத்தில் தகவல் பரவின. தற்போது அதற்கு டாப்சி மறுப்பு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்,

'நான் ஜுட்வா 2 மற்றும் டன்கி போன்ற படங்களை பணத்திற்காக செய்ததாக மக்கள் நினைக்கிறார்கள். ஆனால், அது உண்மைக்கு நேர்மாறானது. அந்த படங்களுக்கு நான் அதிக சம்பளம் பெறவில்லை' என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், தங்கள் படத்தில் நடிக்கும் நடிகைகளை நடிகர்களே தேர்ந்தெடுப்பதாக கூறினார். இது குறித்து அவர் கூறுகையில், "இப்போது, தங்கள் படங்களில் ஹீரோயின் யார் என்பதை ஹீரோக்கள்தான் தீர்மானிக்கிறார்கள் என்பது நமக்கு தெரிந்ததுதான். அதில் சிலர், டிரெண்டில் இருக்கும் ஒருவரையும், அதிக பார்வையாளர்களின் கவனத்தை ஈர்க்கும் ஒருவரையும் நடிக்க வைக்க விரும்புவார்கள். சிலர், தங்களை விட சிறிய நடிகைகளை நடிக்க வைக்க நினைப்பார்கள்' என்றார்.

# மலையாளத்தை விட தெலுங்கில் அதிக அன்பை பெறும் துல்கர் சல்மான்



தமிழ், மலையாளம் மற்றும் தெலுங்கு உள்ளிட்ட தென்னிந்திய மொழிகளில் முன்னணி நடிகராக வலம் வருபவர் நடிகர் துல்கர் சல்மான். இவர் மலையாள நடிகராக இருந்தாலும், இவரது திரைப்படங்களுக்கு தென்னிந்திய மொழிகளில் அதிக வரவேற்பு கிடைக்கிறது.

ஒரு நடிகர் தனது சொந்த மண்ணில்தான் அதிக அன்பை பெறுவார் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. ஆனால், மலையாள நடிகர் துல்கர் சல்மான் விஷயத்தில் இது நேர்மாறாக உள்ளது. நடிகர் துல்கர் சல்மான் தற்போது தெலுங்கு ரசிகர்களால் மிகவும் விரும்பப்படும் நட்சத்திரமாகி இருக்கிறார்.

இதனை இவர் படங்களின் வசூலை பார்த்தாலே நாம் அறிந்து கொள்ளலாம். அதன்படி, இதற்கு முன்பு இவர் நடிப்பில் வெளியான 'சீதா ராமம்' மட்டுமில்லாமல் தற்போது வெளியாகி உள்ள 'லக்கி பாஸ்கர்' படமும் தெலுங்கில் அதிகமாக வசூலித்துள்ளது.

இதற்கு தெலுங்கு ரசிகர்கள் இவரை தங்கள் மண்ணை சார்ந்தவர்போல் எண்ணுவதே காரணமாக இருக்கலாம். லக்கி பாஸ்கர் வெளியாகி 3 நாட்கள் கடந்துள்ளநிலையில், இப்படம் உலகம் முழுவதும் ரூ. 39.9 கோடி வசூலித்துள்ளதாக படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

# மாதவன் நடிக்கும் 'அதிர்ஷ்டசாலி' படத்தின் பர்ஸ்ட் லுக்



தற்போது தமிழ் சினிமாவில் மட்டுமல்லாமல் பாலிவுட் சினிமாவிலும் களமிறங்கி கலக்கி வருபவர் நடிகர் மாதவன். இவர் தமிழில் டெஸ்ட் உள்ளிட்ட படங்களை கைவசம் வைத்துள்ள நிலையில் தற்போது அதிர்ஷ்டசாலி எனும் திரைப்படத்திலும் நடித்து வருகிறார். இந்த படத்தை தனுஷ் நடிப்பில் வெளியான திருச்சிற்றம்பலம் திரைப்படத்தை இயக்கிய மித்ரன் ஆர் ஜவகர் இயக்கி வருகிறார். இந்த படத்தில் மாதவனுடன் இணைந்து ராதிகா சரத்குமார், மடோனா செபாஸ்டின், சாய் தன்ஷிகா உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். என மீடியா கார்ப்பரேஷன் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இதற்கு இசை அமைக்கிறார்.இந்நிலையில்இப்படத்தின்பர்ஸ்ட்லுக்போஸ்டரைபடக்குழுவெளியிட்டுள்ளது. இதில் மாதவன் இரண்டு வகையான தோற்றத்தில் உள்ளார்.

# வாகனம் மோதி 'கருப்பி' நாய் சாவு: நடிகர் கதிர் இரங்கல்

இயக்குனர் மாரிசெல்வராஜ் இயக்கிய முதல் திரைப்படமான பரியேறும் பெருமாள் படத்தில் நடித்த 'கருப்பி' என்ற நாயைச் சுற்றிலும் கதைக்களம் பயணித்து வரவேற்பை பெற்றது. மாரிசெல்வராஜ் தனது சொந்த ஊரான தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் அருகே புளியங்குளம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளிலேயே பெரும்பாலான காட்சிகளை படமாக்கியிருந்தார். 'கருப்பி' நாயை வளர்த்து வந்த புளியங்குளத்தைச் சேர்ந்த விஜயமுத்துவும் அந்த படத்தில் துணை நடிகராக நடித்து இருந்தார். இந்த நிலையில் தீபாவளி பண்டிகை தினத்தன்று புளியங்குளம் பகுதியில் பட்டாசு வெடித்ததால், 'கருப்பி' நாய் ஊரில் இருந்து நெல்லைதிருச்செந்தூர் மெயின் ரோடு பகுதிக்கு ஓடிச் சென்றது. அப்போது அந்தவழியாக சென்ற அடையாளம் தெரியாத வாகனம் மோதியதில் நாய் படுகாயமடைந்தது. அந்தவழியாக சென்றவர்கள் நாயை மீட்டு விஜயமுத்துவின் வீட்டுக்கு கொண்டு சென்றனர். ஆனால் சிறிதுநேரத்தில் நாய் இறந்தது. இதையடுத்து 'கருப்பி' நாய்க்கு மாலை அணிவித்து அப்பகுதியில் புதைத்தனர். இந்த நிலையில், 'கருப்பி' நாய் உயிரிழந்ததற்கு நடிகர் கதிர் இரங்கல் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில், "கருப்பி நீ இல்லாத காட்டில் நான் எப்படி தான் திரிவேனோ... உனக்கு அமைதி கிடைத்துவிட்டது என்று நம்புகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

# ரோகித் சர்மா டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவார் ஸ்ரீகாந்த் கணிப்பு



நியூசிலாந்துக்கு எதிராக மும்பையில் நடந்த கடைசி டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்திய அணி 147 ரன் இலக்கை கூட எடுக்க முடியாமல் 'சரண்' அடைந்ததுடன் தொடரை 03 என்ற கணக்கில் முழுமையாக இழந்தது.

சொந்த மண்ணில் இந்திய அணி 3 அல்லது அதற்கு மேற்பட்ட டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் 'ஒயிட்வாஷ்' ஆனது இதுவே முதல் முறையாகும். இதனால் இந்திய அணி மீது கடும் விமர்சனங்கள் எழுந்தது. குறிப்பாக சீனியர் வீரர்கள் 37 வயதான கேப்டன் ரோகித் சர்மா (6 இன்னிங்சில் 91 ரன்), விராட் கோலி (6 இன்னிங்சில் 93 ரன்) ஆகியோரின் பொறுப்பற்ற பேட்டிங்கே இந்திய அணியின் சொதப்பலுக்கு காரணம் என சமூக வலைதளத்தில் ரசிகர்கள் வறுத்தெடுத்து வருகிறார்கள்.

இந்திய அணி அடுத்ததாக ஆஸ்திரேலியாவுக்கு சென்று பார்டர்கவாஸ்கர் கோப்பைக்கான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. இந்தியா ஆஸ்திரேலியா இடையிலான முதலாவது டெஸ்ட் வருகிற 22ந்தேதி பெர்த்தில் தொடங்குகிறது. இந்த தொடர் ரோகித் சர்மா, விராட் கோலி, அஸ்வின், ரவீந்திர ஜடேஜா உள்ளிட்ட மூத்த வீரர்களுக்கு மிகவும் முக்கியமானதாகும்.

இது தொடர்பாக இந்திய முன்னாள் கேப்டன் ஸ்ரீகாந்த் கூறியதாவது:

ஆஸ்திரேலியாவில் இந்திய அணி சிறப்பாக செயல்படாவிட்டால் என்ன மாற்றங்களை செய்ய வேண்டும் என்பதை நாம் இப்போதே யோசிக்க தொடங்கி விட வேண்டும். ஆஸ்திரேலிய மண்ணில் ரோகித் சர்மா சோபிக்காவிட்டால் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்று விடுவார் என்று நினைக்கிறேன்.

அதன் பிறகு ரோகித் சர்மா ஒரு நாள் போட்டிகளில் மட்டுமே விளையாடுவார். ஏற்கனவே அவர் சர்வதேச 20 ஓவர் கிரிக்கெட்டில் இருந்து விடைபெற்று விட்டார். ரோகித் சர்மாவுக்கு தற்போது வயதாகி விட்டது. அவர் இளம் வீரர் இல்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு விஷயத்தில் ரோகித் சர்மாவை பாராட்டியாக வேண்டும். நியூசிலாந்து தொடரை இழந்ததும் தொடர் முழுவதும் தான் ஒரு கேப்டனாகவும், வீரராகவும் சரியாக செயல்படவில்லை என்ற உண்மையை வெளிப்படையாக ஒப்புக் கொண்டார். நம் மீது தவறு இருந்தால் அதை ஒப்புக்கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம். இது ஒரு மனிதனுக்கு நல்ல தகுதியாகும். தவறை பகிரங்கமாக ஒப்புக் கொண்டதன் மூலம் அது அவருக்கு அதில் இருந்து மீள்வதற்கு உதவிடும் என்று கருதுகிறேன்' என்றார்.

மேலும் ஸ்ரீகாந்த் கூறுகையில், 'விராட் கோலியை பொறுத்தவரை ஆஸ்திரேலியாவில் இருந்து மீண்டும் சிறப்பாக விளையாடத் தொடங்குவார் என்று நம்புகிறேன். ஏனெனில் ஆஸ்திரேலிய மண்ணில் எப்போதும் நன்றாக ஆடுவார். அங்கு ரன் குவிப்பது அவரது பலங்களில் ஒன்று. அவரது டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கை குறித்து இப்போதே கருத்து சொல்வது உகந்ததாக இருக்காது. அதற்கு இன்னும் நிறைய காலம் உள்ளது' என்றார்.

# பிசிசிஐயின் புதிய செயலாளராக ரோகன் ஜெட்லி தேர்வு: வெளியான தகவல்

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் செயலாளராக இருந்த மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் மகன், ஜெய் ஷா கடந்த மாதம் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் தலைவராக நியமிக்கப்பட்டார். டிசம்பர் மாதம் ஐசிசியின் தலைவராக ஜெய்ஷா பொறுப்பேறுக் கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அடுத்த பிசிசிஐ செயலாளர் யார் என்பது குறித்து கேள்வி எழுந்தது.

இந்த பதவிக்கு முன்னாள் ஐபிஎல் தலைவர் ராஜீவ் சுக்லா, முன்னாள் மத்திய அமைச்சர் அனுராக் தாகூரின் தம்பி அருண் துமால், முன்னாள் மத்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லியின் மகன் ரோகன் ஜெட்லி ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைப் பட்டியலில் எதிரொலித்தன.



இந்நிலையில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் அருண் ஜெட்லியின் மகனும் டெல்லி கிரிக்கெட் சங்கத்தின் தலைவருமான ரோகன் ஜெட்லி, பிசிசிஐன் அடுத்த செயலாளராக தேர்வு செய்யப்படலாம் என தகவல் வெளியாகி உள்ளது. விரைவில் இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.